

# ஆண்கள் டிரவுசர்ஸ்

*உங்களுக்கோ இல்லை நீங்க விரும்பும் ஒருத்தருக்கோ இதை தைக்கணும்னு நீங்க ஆசைப்பட்டா, இந்த ஸ்டெப்-பை-ஸ்டெப் டுடோரியல் உங்களுக்குதான்.*



**தேவைப்படும் பொருள்கள்**

60" அகலத்துல 1.5 மீட்டர் துணி
2 மீட்டர் ரெடி ஸ்ட்ரிப் கேன்வாஸ் ஃப்யூசிங்.
2 மீட்டர் ஆன்டி ஸ்லிப் இடுப்பு பான்ட் லைனிங்.
1/4 மீட்டர் மைக்ரோ டாட் ஃப்யூசிங்.
1 மீட்டர் பாக்கெட் மெட்டீரியல்.
1/4 மீட்டர் கேன்வாஸ் ஃப்யூசிங்.
மென் டிரவுசருக்கான டெம்ப்ளேட்டை நீங்க எங்க www.ushasew.com வெப்சைடிலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்
சாக்
ஸ்கேல்
பொருத்தமான நூல்
மணிகோர்த்த ஊசிகள்
மெஷரிங் டேப்
லூப் ட்யூனர்
கத்தரிக்கோல்
7" ஜிப்பர்
டிரவுசர் ஹூக் & ஐ செட்
கை ஊசி
மற்றும் உஷா ஜானோம் ஜிப்பர் ஃபூட்



இந்த டுடோரியல்ல டெம்ப்ளேட்டுக்கு ஏற்ற மாதிரி எப்படி துணிய வெட்றதுன்னு நாம கத்துக்குவோம். பாக்கெட்சோட சேர்த்து பேன்டின் முன் பீசஸ உருவாக்கறது. ஃப்ளை தயார் செய்யறது ஜிப்பரோட சேர்த்து முன் பீசஸ ஜாயின் பண்றது. பாக்கெட்சோட சேர்த்து பேன்டின் பின் பீசஸ உருவாக்கறது, பின் பீசஸ ஜாயின் பண்றது, அதைத் தொடர்ந்து முன், பின் பீசஸ ஒண்ணா ஜாயின் பண்றது. வெயிஸ்ட் பான்ட் தயாரித்தல் அதை டிரவுசரோட இணைக்கிறது, தொடர்ந்து பாட்டமை ஹெம் பண்றது எல்லாத்தையும் கத்துக்குவோம்.

**ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங் & கட்டிங்**




நாங்க டிரவுசருக்கு நேவி-ப்ளூ துணிய எடுத்திருக்கோம். துணிய விரிச்சு ராங் சைட் ராங் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி நீளவாக்குல மடியுங்க. டெம்ப்ளேட்ட எடுத்து வைக்க தொடங்கலாம். முன்பக்க டெம்ப்ளேட்ட துணியோட கீழ் பாதிலயும் பின் டெம்ப்ளேட்ட துணியோட மேல் பாதியிலும் இதுல காட்டியிருக்க மாதிரி வைங்க.









டெம்ப்ளேட்ட துணில பின் பண்ணலாம். முன் டெம்ப்ளேட்டிலிருந்து தொடங்கலாம். துணியோட ரெண்டு லேயர்ஸ்லயும் பின் நுழையறதை உறுதி செய்துக்கணும். பின்பக்க டெம்ப்ளேட்டயும் பின் பண்ணனும். இப்ப சாக்கால டெம்ப்ளேட்ஸ துணில டிரேஸ் பண்ணனும். மூலைகள்ல, வளைவான பகுதிகள்ல கவனமா இருக்கணும். டிரவுசர்ஸ் சரியா வரணும்னா அதுக்கு சரியான டிரேஸ் லைன் இருக்கறது ரொம்ப முக்கியம். இது முடிஞ்சதும் டெம்ப்ளேட்டிலிருந்து பின்ஸ நீக்க ஆரம்பிங்க. டெம்ப்ளேட்ஸ தனியா வையுங்க. கத்தரிக்கோலை எடுத்துட்டு மார்க் பண்ணின லைன்ல கட் பண்ண ஆரம்பிங்க. முன்பக்க பீஸ்சிலிருந்துதொடங்குங்க. கட்டிங் சரியா அமையணும்னா கை நடுக்கமில்லாம இருக்கணும். பின்பக்க பீசையும் கட் பண்ணுங்க. ரெண்டு பீசையும் தனியா வையுங்க.









மீதி உள்ள துணிய வெளிய எடுத்து மற்ற டெம்ப்ளேட்ஸ் வேலைய பாக்கலாம். ஃப்ளை, சின்ன முன்பக்க பாக்கெட், பெரிய முன்பக்க பாக்கெட், பின்பக்க பாக்கெட் டெம்ப்ளேட்ஸ எடுத்து இதுல காட்டியிருக்க மாதிரி துணி மேல வையுங்க. துணில எல்லா டெம்ப்ளேட்ஸயும் வையுங்க. சரியான மார்கிங், கட்டிங்-அ உறுதிசெய்ய ரொம்ப சின்ன டெம்ப்ளேட்ஸகூட துணில பின் பண்ணனும். சாக்-அ எடுத்துட்டு துணிமேல டெம்ப்ளேட்ஸ ட்ரேஸ் அவுட் பண்ணனும். ஃப்ளைலேந்து தொடங்கி பின்பக்க பாக்கெட்ல முடிக்கணும். பின்பக்க பாக்கெட்க்கு இன்னொரு பீஸ் தேவைப்படும். மார்க் பண்ணின லைனுக்கு அடியில டெம்ப்ளேட்ட வைச்சு பின் பண்ணுங்க. துணில டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. எல்லா டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ நீக்கிட்டு அவற்றை தனியா வையுங்க. ஒவ்வொரு பீசா கட் பண்ணி எடுங்க. இதுவரை நம்மகிட்ட ரெண்டு பின்பக்க பாக்கெட் பீசஸ், 2 வெவ்வேற முன்பக்க பாக்கெட் பீசஸ்அப்புறம் ஒரு ஃப்ளை பீஸ் இருக்கு.





இப்ப லைனிங் துணி வேலைய பாக்கலாம். இதுல காட்டியிருக்க மாதிரி அதை நீளவாக்குல மடிங்க. இதுல காட்டி இருக்க மாதிரி முன்பக்க பெரிய பாக்கெட் டெம்ப்ளேட் அதை தொடர்ந்து பின்பக்க பெரிய பாக்கெட் அப்புறம் ஃப்ளை டெம்ப்ளேட்ட வையுங்க. இப்ப முன்னாடி மாதிரி இந்த எல்லா டெம்ப்ளேட்ஸயும் பின் பண்ணப்போறோம். தொடர்ந்து துணில இவற்றை சாக்கால ட்ரேஸ் பண்ணப்போறோம்.டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துட்டு அதை தனியா வைக்கணும். கடைசியா ட்ரேஸ் பண்ணின லைன்ல கட் பண்ணினா நமக்கு 2 முன்பக்க பாக்கெட், பின்பக்க பாக்கெட் அப்புறம் ஃப்ளை பீசஸ் கிடைக்கும். கட் பண்ணின பீசஸ தனியா எடுத்து வைங்க.









இப்ப நாம மைக்ரோடாட் ஃப்யூசிங்கிலிருந்துஃப்ளை பீசஸ கட் பண்ணனும் அப்புறம் சின்ன பின்பக்க பாக்கெட் பீசஸ கேன்வாஸ் ஃப்யூசிங்கிலிருந்து கட் பண்ணனும். மைக்ரோடாட் ஃப்யூசிங்க இதுல காட்டியிருக்க மாதிரி ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வைக்கணும். சாக் எடுத்து டெம்ப்ளேட்ட மார்க் பண்ணனும். மார்க் பண்ணின லைன்ஸ்ல கட் பண்ணுங்க. இந்த பீசஸ தனியா வையுங்க.







இப்ப கேன்வாஸ் ஃப்யூசிங்க எடுத்து அதுக்கு மேல பாக்கெட் டெம்ப்ளேட்ட ட்ரேஸ் செய்யுங்க. மார்க் பண்ணின லைன்ல கட் பண்ணுங்க. இப்ப நம்பகிட்ட ரெண்டு கேன்வாஸ் ஃப்யூசிங் இருக்கறதை நீங்க பாக்கலாம். ஃப்யூசிங்க பாதியா மடிச்சு, காட்டப்பட்டபடி க்ரீஸ் லைன்ல கட் பண்ணுங்க. மற்ற பகுதியிலும் இதே பிராசஸ் ரிபீட் பண்ணுங்க. எங்ககிட்ட பின்புற டெம்ப்ளேட்டிலிருந்து தயாரிக்கப்பட்ட 2 ஃப்ளை பீசஸ். நாலு கேன்வாஸ் ஃப்யூசிங் இருக்கு.






**ஸ்டெப் 2 சைட் சீம்ஸ், இன்னர் சீம்ஸ் மற்றும் முன்பக்க பீசஸ்-ன் க்ரோச் ஏரியாவை ஓவர்எட்ஜிங் செய்தல்.**

இப்ப நாம டிரவுசரோட முன்பக்க பீசஸ பாக்கலாம். இப்ப நம்பகிட்ட ரெண்டு முன்பக்க பீசஸ் இருக்கு. ஒண்ணு இடது இன்னொண்ணு வலது. ரெண்டு பீசஸ்சோட சைட் சீம்ஸ், இன்னர் சீம்ஸயும் தனித்தனியா ஓவர்எட்ஜ் பண்ணனும். உஷா ஜானோம் வொண்டர் ஸ்டிட்ச் பிளஸ் தையல் மிஷினுக்கு துணிய கொண்டு வாங்க. டிரவுசரோட ஒரு பீஸ எடுத்துட்டு அவுட்டர் சீம்-அ பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணுங்க. ஜிக் ஜாக் தையலுக்கு மிஷினோட பேட்டன் செலக்டார் டயலை 'சி'லயும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணுங்க.



டிரவுசரோட டாப்பிலிருந்து தொடங்கி முடிவு வரை தைச்சிட்டே வாங்க. ஜிக் ஜாக் தையல் டிரவுசருக்கு ஒரு நேர்த்தியான ஃபினிஷிங்கை கொடுக்கும், அதோட ஃப்ரேயிங் இருக்காது. நூலை கட் பண்ணிட்டு இன்னர் சீம்-க்கு போங்க. அடிப்பகுதியிலிருந்துதைக்க ஆரம்பிச்சு க்ரோச் ஏரியா வரை போங்க. க்ரோச் ஏரியா வந்த உடனே நிறுத்துங்க. ஊசிய தூக்கிட்டு துணிய திருப்பி டிரவுசர்ஸ் டாப் பகுதி வர்றவரை தையுங்க. நூலை கட் பண்ணிருங்க. இதே புரோசீஜரை இன்னொரு முன்பக்க பீசுக்கும் ரிபீட் பண்ணுங்க. முடிஞ்சதும் பெட்டர் ஃபினிஷிங்குக்கு கூடுதலா உள்ள நூலை கட் பண்ணுங்க. நீங்க தைச்ச எட்ஜ் பாக்க இப்படித்தான் இருக்கணும்.

**ஸ்டெப் 3 முன்பக்க பாக்கெட்ஸ் தயாரித்தல்**




முன்பக்க பாக்கெட்டுக்காக நாம கட் பண்ணின பீசஸ் இதுதான். முதல்ல முன்பக்க இடது பாக்கெட்ல தொடங்கலாம். முன்பக்க பாக்கெட்டின் லைனிங் பீஸ, வேற பாக்கெட் பீசஸ்ல ஒவ்வொன்னுத்தலம் ஒன்றை சேர்த்து எடுங்க. இவற்றை ஒன்னா தைக்கறதுக்கு முன்னால இதுல குறிப்பிட்டிருக்க மாதிரி விளிம்புகள்ல ஓவர்எட்ஜ் தையல் அல்லது ஜிக் ஜாக் தையல் போடுவோம். எட்ஜஸ் பாக்க இப்படித்தான் இருக்கும்.








தைக்கறதுக்கு இவற்றை சரியா வைப்போம். இதுல காட்டி இருக்க மாதிரி பெரிய பீஸ பாக்கெட்டின் வலது பக்கத்தில வைக்கணும். ராங் சைட் ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும். இதுல காட்டினபடி பாக்கெட்டின் இடது பக்கத்தில பெரிய பீஸ வைக்கணும். பாக்கெட் லைனிங்கோட பீசஸ தைக்கணும். முதல்ல, பெரிய பீசோட தொடங்கலாம். இன்னர் சீம்-அ தைக்கப்போறோம், இதுல காட்டி இருக்க மாதிரி துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அட்ஜஸ்ட் பண்ணுங்க. நேர் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை 'ஏ'க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. துணில இது வளைஞ்ச பீஸ் அதனால கைய ஷேக் பண்ணாம தைக்கணும். முடியற இடத்துக்கு வந்ததும் நூலை கட் பண்ணுங்க. இன்னொரு பீசுக்கு போங்க. அட்டாச் பண்றது ரொம்ப ஈசி. துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சு தையுங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணுங்க.

ரெண்டு பீசஸ்லயும் தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும். இதே மாதிரி வலது பாக்கெட்டையும் தைக்கணும்.

## ஸ்டெப் 4 முன்பக்க பீசஸ்ல பாக்கெட் அட்டாச் செய்தல்

டிரவுசரோட இடது பக்கத்தில இடது முன்பக்க பாக்கெட்ட ராங் சைட் ரைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வெச்சிருக்கோம். துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணிட்டு பாக்கெட் முழுவதும் தையுங்க. நாம தைக்க பாக்கெட் பாக்க இப்படித்தான் இருக்கும். டிரவுசரோட கூடுதல் பகுதிய ரிமூவ் பண்ணிறணும். அதை கத்தரிக்கோலால கட் பண்ணிருங்க.






Tசின்ன பாக்கெட் துணியோட பாக்கெட்டை திருப்பி, அதை உங்க விரலால மடிங்க. இப்ப பாக்கெட்ட வேற பக்கம் திருப்புங்க இதுல இப்ப நாம க்ரீஸ் பண்ணின மடிப்புல ஒரு எட்ஜ் ஸ்டிச் போடணும். மடிப்பை பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சு தைக்க தொடங்குங்க. தைக்கும்போது மடிப்பு சரியான இடத்தில இருக்கறதை உறுதி செய்துக்கங்க.








முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க. இப்ப ஸ்ட்ரிப்போட ஓபனா இருக்கற முனைய டிரவுசரோட தைக்கணும். துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சு தைக்க ஆரம்பிங்க. தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப பாக்கெட்டின் பாட்டம் எட்ஜ் வேலைய பாக்கலாம். இதுல காட்டி இருக்க மாதிரி பாக்கெட்டை பாதியா மடிச்சு பாட்டம் ரவுண்ட்-அ தைக்கலாம். பிரஸ்ஸர் ஃபூட் அடியில வெச்சு தைக்க ஆரம்பிங்க. இது வளைஞ்ச சர்ஃபேஸ் அதனால கை நடுங்காம, சீரா தைக்கணும். முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க. தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப நாம பாக்கெட்டை வெளிப்பக்கமா திருப்பணும். விளிம்புகள் நேர்த்தியா இழுக்கப்பட்டுருக்கான்னு உறுதி செய்துக்கணும்.




பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சு தைக்க ஆரம்பிங்க. தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும். டிரவுசரோட வெய்ஸ்லைனை பாக்கலாம். டாப்ல பாக்கெட்டை சரியா அலைன் பண்ணி துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சு தைக்க ஆரம்பிங்க. முனைக்கு போய் சேர்ந்த பிறகு நிறுத்திட்டு நூலை கட் பண்ணிருங்க. முன்பக்க பாக்கெட்ட டிரவுசரோட ஒரு பக்கத்துல வைச்சு தைச்சு முடிச்சிட்டோம். பக்கவாட்டில் பாக்கெட் ஜாயின் பண்ண இதையே ரிபீட் பண்ணுவோம்.






இந்த பாக்கெட்டும் இறுதித் தையலும் பாக்க இப்படித்தான் இருக்கும். இன்னொரு பக்கத்துக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணலாம்.




## ஸ்டெப் 5 ஃப்ளை பீசஸ் தயாரித்தல்





ஃப்ளை வேலைய பாக்கலாம். நம்பகிட்ட ஒவ்வொரு துணிலயும் ரெண்டு ஃப்ளை ஸ்ட்ரிப்ஸ் இருக்கறதை நீங்க பாக்கலாம். மெயின் துணி, அப்றம் லைனிங் துணி அப்றம் மைக்ரோடாட் ஃப்யூசிங் துணி இருக்கும். மெயின் துணில ஒரு பீஸ எடுத்துகிட்டு ராங் சைட்-அ மேல வையுங்க. இப்ப மைக்ரோடாட் ஃப்யூசிங்ல ஒரு பீஸ எடுத்துகிட்டு அதன் க்ளூ போர்ஷனை இதுல காட்டி இருக்க மாதிரி மெயின் துணில வையுங்க. இன்னொரு ஃப்ளை பீஸ்லயும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இந்த ரெண்டு ஸ்ட்ரிப்ஸயும் அயர்ன் பண்ணலாம் அப்பதான் துணி ஒண்ணா இணையும்.




இதையே ரெண்டு பீஸ்க்கும் செய்யுங்க. மெயின் துணிய லைனிங் துணி மேல ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வைங்க. இதையே ரெண்டு பீஸ்க்கும் செய்யுங்க. இப்ப நாம ஃப்ளை பீசஸ் தனித்தனியா தைக்கணும்.




ஃப்ளை பீஸ பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணுங்க. மிஷினை நேர் தையலுக்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. வளைவுல கவனமா கைய ஷேக் பண்ணாம தைக்கணும். முடிச்சதும் நூலை கட் பண்ணுங்க. கத்தரிக்கோலை எடுத்துகிட்டு வளைவுல வீடியோல காட்டியிருக்க மாதிரி நோட்சஸ் கிரியேட் பண்ணுங்க.







இப்ப முடிக்கப்படாத சைட்லயும் தைக்கணும். மிஷினை ஜிக் ஜாக் தையலுக்கும் தையல் நீளத்தை 1.5க்கும் செட் பண்ணுங்க. தைக்கப்படாத பக்கத்தை தையுங்க. தைச்சு முடிச்ச ஃப்ளை பாக்க இப்படித்தான் இருக்கணும். இன்னொரு ஃப்ளை பீசுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இப்ப நம்பகிட்ட ரெண்டு பீசஸ் தயாரா இருக்கு.







## ஸ்டெப் 6 ஃப்ளைய அட்டாச் பண்ணி முன்பக்க பீசஸ், ஜிப்பர ஜாயின் செய்தல், க்ரோச் பகுதிய முடித்தல்.




இப்ப நாம ஃப்ளை பீசஸ முன்பக்க துணியோட தைச்சு ஜிப்பரையும் அட்டாச் பண்ணனும். எல்லாத்தையும் தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. முதல்ல வலது முன்பக்க துணிய பார்ப்போம். டேப்-அ எடுத்துகிட்டு, டாப்ல 6.5 இன்ஞ்ச் அளந்துகிட்டு சாக்கால மார்க் பண்ணுங்க.




ஜிப்பரை எடுத்துகிட்டு ஜிப்பர் முனைய வீடியோ காட்டியிருக்க மாதிரி 6.5 இன்ஞ்ச் மார்க்ல, ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வையுங்க. ஜிப்பரோட ஓபனிங் டாப் சைட்ல இருக்கும். இப்ப ஃப்ளையோட ஒரு பீஸ ஜிப்பர் மேல ரைட் சைட் கீழ்ப்பக்கம் பாத்தா மாதிரி வைங்க




ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-அ உஷா ஜானோம் ஜிப்பர் ஃபூட்க்கு மாத்துங்க. அலைன் செய்த பீசஸ பிரஸ்ஸர் ஃபூட் அடில வைச்சு, மிஷினை நேர் தையலுக்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணுங்க. கீழேந்து மேல் நோக்கி வீடியோ இருக்க மாதிரி தையுங்க. ஆரம்பத்துலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க.




இப்ப டவுசரை ரைட் சைட்ல திருப்பி துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடில அலைன் பண்ணுங்க. ஜிப்பரை பாதிவரை திறங்க. இப்ப எட்ஜ் ஸ்டிச் போடணும். பாதி வரை வந்ததும் ஜிப்பரை மூடி ஜிப் என்ட் வரை தொடர்ந்து தையுங்க. ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு முடிங்க. டிரவுசரோட வலது பக்கம் அட்டாச் பண்ணின ஜிப்பர் பாக்க இப்படித்தான் இருக்கணும்.




இப்ப டிரவுசரோட இடது பக்கத்துக்கு போகலாம். இந்த பக்கத்திலயும் மறுபடியும் 6.5 அங்குலம் மார்க் பண்ணனும். டேப் வைச்சு அளந்து மார்க் பண்ணிக்கங்க. ஃப்ளையோட பாயின்டட் முனைல மார்க் மேல ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்தா மாதிரி வையுங்க.




ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-அ ஜிப்பர் ஃபூட்க்கு மாத்துங்க. டிரவுசரையும் துணியையும் பிரஸ்ஸர் ஃபூட் அடில வைச்சு , நேர் தையல் போடுங்க கீழேந்து மேல் நோக்கி தையுங்க. ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. தைச்ச போர்ஷன் பாக்க இப்படித்தான் இருக்கணும். சீம்லைன்-அ விரலால கிரீஸ் பண்ணுங்க. டுடோரியல்ல காட்டின மாதிரி இப்ப ஃப்ளைய ராங் சைட்-ல மடிங்க.




இப்ப நாம இந்த மடிப்பை இதுல காட்டியிருக்க மாதிரி டிரவுசரோட இடது கால்ல ஃப்ளையோட சீம்லைன்ல டிரவுசரோட ரைட் சைட்ல வைக்கணும், ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும். இவை சரியா மேட்ச் ஆகியிருக்கான்னு உறுதி செய்துக்கங்க. இடது வலது கால்களோட வெய்ஸ்ட்லைன்ஸ் மேட்ச் ஆகியிருக்கான்னும் உறுதி செய்துக்கங்க. வலது கால்ல தைக்காத ஜிப்பர் பகுதிய இடது காலோட தைக்காத ஃப்ளை பகுதியோட தைக்கணும். ஃப்ளைய அடிப்பகுதியில தைக்கக்கூடாதுங்கறத உறுதி செய்துக்கணும் அதனால இதுல காட்டியிருக்க மாதிரி அதை கொஞ்சம் லிஃப்ட் பண்ணிக்கணும். the left leg. Make sure you are not stitching the fly underneath




மறுபடியும் ஜிப்பர் ஃபூட்ல தைக்கணும். துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடில வைச்சு தைக்க ஆரம்பிங்க. இந்த தடவை நாம வெய்ஸ்டிலிருந்து ஃப்ளை பாட்டம் வரை தைப்போம். தைச்ச ஜிப்பர் பாக்க இப்படி இருக்கணும்.




அடுத்து க்ரோச் ஏரியா. ஜிப்பர் ஃபூட்-அ ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்க்கு மாத்துங்க. துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடில அலைன் பண்ணுங்க. ஃப்ளை எட்ஜ்லேந்து தொடங்கி முழு க்ரோச் ஏரியாவையும் தைக்கணும். ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணுங்க.









இந்த பகுதியில இன்னும் ஒரு தையல். ஃப்ளை போர்ஷனுக்கு ஒரு ஷேப் ஸ்டிச் கொடுக்கணும். ஃப்ளை ட்ரேசிங் டெம்ப்ளேட்ட ஃப்ளை ஏரியால வைங்க. சாக்கால டெம்ப்ளேட்ட துணில மார்க் பண்ணுங்க. இப்ப அந்த லைன்ல நாம தைக்கணும். சிறப்பா ஹான்டில் பண்றதுக்காக ஜிப் ஓபனா இருக்கணும். தைக்க ஆரம்பிங்க. முடியற இடத்துக்கு வர்றப்ப நிறுத்திட்டு ஜிப்பை மூடுங்க. ஃப்ளையோட வலது பக்கத்தை எடுத்து ஜிப்புக்கு அடியில தள்ளி அதுக்கு மேல தையுங்க. நூலை கட் பண்ணுங்க. நீங்க தைச்ச ஃப்ளை, ஜிப் பகுதி பாக்க இப்படித்தான் இருக்கணும். இதுல காட்டியிருக்க மாதிரி ஷேப் ஸ்டிச்சும் செய்தாச்சு.






வெய்ஸ்ட்லைனுக்கு போகலாம், கத்தரிக்கோலால அதிகப்படியா உள்ள ஃப்ளை பீஸ கட் பண்ணிருங்க. ஜிப்பை தைச்சுதான் லாக் பண்ணனும். ஜிப்பர் போர்ஷனை பிரஸ்ஸர் ஃபூட் அடியில அட்ஜஸ்ட் பண்ணி வைச்சு முழுசா தையுங்க. நூலை கட் பண்ணுங்க. ஜிப்போட இன்னொரு எட்ஜ்லயும் இதையே ரிபீட் பண்ணனும். ஜிப்பை மூடிருங்க, அது சில்க் மாதிரி ஸ்மூத்தா இருக்கணும்.



**ஸ்டெப் 7 பேக் பீசஸ் தயாரித்தல்**

பின் பக்கத்துக்கு நம்மகிட்ட ரெண்டு பீசஸ் இருக்கு. ஒன்னு வலது காலுக்கும் இன்னொண்ணு இடது காலுக்கு. முதல்ல வலது காலை பாக்கலாம். பேக்-அ அசெம்பிள் பண்றதுக்கு முன்னால இந்த பீஸ்க்கு, க்ரோச் ஏரியா அப்புறம் இன்னர் சீம்-க்கு ஒரு ரவுன்ட் ஜிக் ஜாக் தையல் போடணும். நாம தைச்சது பாக்க இப்படி இருக்கும்.




டெம்ப்ளேட் மார்க் பண்ணின பேக்-அ துணி பின்னால இதுல காட்டின மாதிரி வையுங்க. டிரவுசரோட வெய்ஸ்ட்லைன் பக்கத்தில மூணு நோட்சஸ் அப்புறம் ஒரு பாயின்ட்ட கவனிங்க. இவற்றை சாக் யூஸ் பண்ணி மார்க் பண்ணுங்க.




டெம்ப்ளேட்ட தனியா வையுங்க. இந்த மூணு நோட்சஸயும் ஸ்கேலால டாட்-ல ஜாயின் பண்ணுங்க. இந்த லைன்ஸ் டிரவுசரோட டார்ட்ஸா இருக்கும். இப்ப இவற்றை தைக்கலாம்




இதுல காட்டியிருக்க மாதிரி துணிய நடுவுல மடிங்க. மடிப்பை பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணுங்க. மிஷினை நேர் தையலுக்கும் தையல் நீளத்தை 2.5க்கும் வைச்சு செட் பண்ணுங்க. பாயின்டிலிருந்து நோட்ச்-அ நோக்கி தையுங்க. முடியற இடத்தில ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க.







டார்ட் பாக்க இப்படி இருக்கணும். ஓவர் எட்ஜிங் அன்ட் டார்ட் மேகிங்-ன் ஒட்டுமொத்த பிராசஸயும் பேக் பீஸ்-ன் இன்னொரு பக்கத்திலயும் ரிபீட் பண்ணனும்.

**ஸ்டெப் 8 பேக் பீஸ்-ல் பாக்கெட் அட்டாச் செய்தல்**






இப்ப ரெண்டு பேக் பீசஸ் தயாரா இருக்கு. முதல்ல பேக் பீசின் இடது கால்ல தொடங்கலாம். பேக் பாக்கெட் லைனிங்க. மெயின் துணி பாக்கெட் பீசஸ் அப்புறம் ஃப்யூசிங் பீசஸ் எல்லாம் நம்பகிட்ட இருக்கு. மெயின் துணில கட் பண்ணின ரெண்டு சின்ன பாக்கெட் பீசஸ்ல நேர்த்தியான ஃபினிஷிங்குக்கு எல்லா பக்கங்கள்லயும் ஜிக் ஜாக் தையல் போடணும். துணி எவ்வளவு நீட்-ஆ இருக்கு பாருங்க.

லைனிங் துணிய எடுத்து டிரவுசரோட பேக் பீசோட ரைட் ஃபேசிங் மேல வையுங்க. சரியான இடத்தில வைக்கறதை உறுதி செய்துக்கங்க, வெய்ஸ்ட் லையனிலிருந்து3¼" அளந்து மார்க் பண்ணுங்க. அதுக்கு அப்புறம் இதுல உள்ளபடி பாக்கெட்டின் டாப்லேந்து 1 அங்குலம் அளந்து மார்க் பண்ணுங்க. இப்ப நாம பாக்கெட் லைனிங்கோட 1 அங்குல மார்க்-அ பான்ட்-ன் 3¼" மார்கோட மேட்ச் பண்ணி பாக்கெட் லைனிங்அ வையுங்க. பான்ட் அகலத்துல பாக்கெட் சென்டர்ல இருக்கறதை உறுதி செய்துக்கங்க.






பாக்கெட் லைனிங்க பேக் பாக்கெட் டெம்ப்ளேட்ல வையுங்க. டெம்ப்ளேட் ஓபனிங்க லைனிங் துணில மார்க் பண்ணனும். சாக்கால ரெண்டு பாயின்ட்ஸ் மார்க் பண்ணுங்க. டெம்ப்ளேட்ட தனியா எடுத்து வையுங்க. இப்ப ரெண்டு பாயின்ட்ஸயும் ஸ்கேலால ஜாயின் பண்ணுங்க. இந்த லைனை சுற்றி ஒரு செவ்வக பாக்ஸ் தைக்கணும். டாப்பிலிருந்து பாட்டமிலிருந்து சுமார் ¼" விட்டு முடிஞ்சவரை பக்கங்களுக்கு நெருக்கமா தைக்கணும்.








பாக்கெட்டை பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணி ரெகுலர் நேர் தையலை லைன சுற்றி போடுங்க. மூலைக்கு வரும்போது பிவோட்டிங் டெக்னிக்-அ யூஸ் பண்ணி தொடர்ந்து தையுங்க. ஒரு செவ்வகம் உருவாக்க எல்லா பக்கங்களையும் தையுங்க. இது முடிஞ்சதும் நூலை கட் பண்ணுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கும். இப்ப பாக்கெட்டுக்கு ஓபனிங் உருவாக்க இந்த லைன்ல கட் பண்ணனும். ஒரு சின்ன கத்தரிக்கோலை எடுத்துகிட்டு துணிய மடிச்சு ஒரு ஸ்லாஷ் பண்ணுங்க. இது மூலமா கத்தரிக்கோல் உள்ள போகும், அப்பதான் நெர்த்தியாக கட்பண்ண முடியும். இதில் காட்டியுள்ளபடி மூலைகளை கட் பண்ணுங்க. இதுதான் ஓப்னிங்.




பாக்கெட் டிரவுசருக்கு வலது பக்கம் இருக்கறதை நீங்க பாக்கலாம். இப்ப இந்த இடைவெளிய யூஸ் பண்ணி பாக்கெட்ட டிரவுசருக்கு ராங் சைட்ல மூவ் பண்ணுங்க. இப்ப அயர்ன் பண்ணனும்.




ஸ்டிச் பண்றப்ப உருவாக்கின சீம்லைனை ஃபிளாட்டன் பண்ணி அயர்னும் பண்ணனும், அப்பதான் இது படிஞ்சு இருக்கும். சீம்லைன்ஸ் எவ்வளவு நல்லா செட்டில் ஆகி இருக்குன்னு பாருங்க.






அடுத்து நாம செய்யப்போறது, பாக்கெட் ஓபனிங் ஃபினிஷிங். இதுக்கு நமக்கு ஃப்யூசிங்கோட கொஞ்சம் நேரத்துக்கு முன்னால ஓவர்எட்ஜ் செய்த பாக்கெட் ஸ்ட்ரிப் தேவை. ஃப்யூசிங்கோட க்ளூ எட்ஜ் சைட்-அ இதுல காட்டின மாதிரி மெயின் பாக்கெட் துணி பீசின் ராங் சைட்-ல வையுங்க. இப்ப நமக்கு மெயின் துணில இன்னொரு ஸ்ட்ரிப் தேவை இது ஃப்யூசிங்கோட அளவுக்கு சமமா இருக்கும். ஃப்யூசிங்கோட க்ளூ சைட்-அ மெயின் துணி பீசின் ராங் சைட்-ல வையுங்க. ஃப்யூசிங்க்கு மேல அயர்ன் பண்ணுங்க அப்பதான் அது மெயின் துணியோட ஒட்டிக்கும். ரெண்டாவது ஸ்ட்ரிப்க்கும் இதையே ரிபீட் பண்ணுங்க.






இந்த ரெண்டு ஸ்ட்ரிப்பயும் சென்டர் பேக்-ல அதை கவர் பண்ண நாம தைக்கணும். எப்படி வந்திருக்குன்னு பாக்கலாம். முதல்ல மெல்லிசான ஸ்ட்ரிப்ப எடுத்து பாதியா மடிங்க. விரலால அதை க்ரீஸ் பண்ணுங்க. மடிச்ச ஸ்ட்ரிப்ப பாக்கெட்டின் டாப் முனைல வையுங்க ஆனா அது பாக்கெட்டோட ஓபனிங்கின் சென்டர் வரை வருதான்னு உறுதி செய்துக்கங்க. இப்ப நாம இந்த ஸ்ட்ரிப்ப பாக்கெட் லைனிங் துணில பின் பண்ணனும். டிரவுசர் துணில இதை பின் பண்ணிராம பார்த்துக்கொங்க இப்ப பெரிய பீஸ எடுத்துகிட்டு அதை ஃப்யூசிங் வரை மடியுங்க. இது பாக்கெட்டின் கீழ் முனைல வைக்கணும் ஆனா இதுவும் ஓபனிங்கின் சென்டர் வரை வருதான்னு உறுதி செய்துக்கொங்க. இந்த பீசையும் பின் பண்ணுங்க. தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால இங்க ரெண்டாவது பாக்கெட்ட வைச்சு தைக்கணும். இப்ப மிஷினுக்கு போகலாம்.




முதல்ல, பாக்கெட் ஓபனிங்-ன் டாப் பகுதிய நாம தைக்கணும். கேப்-அ ஓபன் பண்ணி அதை திருப்புங்க. சீம் அலவன்ஸ் மேல தைக்கணும். இதை பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சு தைக்க ஆரம்பிங்க. முடியற இடத்துக்கு வந்த பிறகு நூலை கட் பண்ணிட்டு பின்ஸ நீக்கிருங்க. ஓபனிங்கோட டாப் ரைட் சைட்லேந்து பாக்க இப்படித்தான் இருக்கணும்.




இதே பிராசஸ பார்டர் ஸ்ட்ரிப்புக்கும் ரிபீட் பண்ணுங்க. துணிய திருப்பிகிட்டு சீம் அலவன்ஸ் மேல தைக்கணும். துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. பிரஸ்ஸர் ஃபூட் அடியில மடிப்பு கரெட்டா வைக்கப்பட்டிருக்கான்னு பார்த்துக்கொங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணிட்டு பின்ஸ நீக்கிருங்க. ஓபனிங் பாக்க இப்படித்தான் இருக்கணும்.







பின்னாடி தையல் பாக்க இப்படி இருக்கணும்.

ஓபனிங்கோட பாட்டம்ல அட்டாச் பண்ணப்பட்ட ரெண்டாவது ஸ்ட்ரிப் பாக்கெட் லைனிங்ல தைக்கப்படணும். ஸ்ட்ரிப்போட பாட்டமை மட்டும்தான் லைனிங் துணியோட தைப்போம் இதை மெயின் டிரவுசர் துணில தைக்க மாட்டோங்கறதை கவனிங்க. விளிம்புகள்ல பிவோட் பண்ணி மூணு பக்கங்களையும் தையுங்க. நூலை கட் பண்ணுங்க.




இன்னும் ஒரு பீஸ் இருக்கு. மெயின்துணியிலிருந்து கட் பண்ணின சின்ன பேக் பாக்கெட்டை பாக்கெட் லைனிங்ல தைக்கணும். இதுல காட்டி இருக்க மாதிரி பாக்கெட் லைனிங்கின் எட்ஜசோட மேட்ச் ஆகற மாதிரி வைக்கணும். இவற்றை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தையுங்க. மூலைகள்ல பிவோட் பண்ணி எல்லா பக்கங்களையும் தையுங்க. தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கணும்.




பாக்கெட்டை வீடியோல காட்டியிருக்க மாதிரி பாதியா மடிக்கணும். பாக்கெட் லைனிங்கோட ரெண்டு ஓபன் எட்ஜஸ அடுத்து தைக்கணும். எட்ஜஸ துணியின் ரெண்டு லேயர்களோட உள்பக்கமா ¼ அங்குலத்துக்கு மடிங்க. மடிச்ச துணிய பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. தைக்கறப்ப மடிப்புகள் அதன் இடத்தில இருக்கறதை உறுதி செய்துக்கணும். முடியற இடத்துக்கு வந்த பிறகு நூலை கட் பண்ணுங்க. இன்னொரு பக்கத்திலயும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கணும்.






ரெண்டு லேயர்லையும் எட்ஜ் ஸ்டிச் போட்டு பாயின்டட் செக்ஷன்ல செக்யூர் பண்ணனும். துணிய பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி வளைவுல மெதுவா சீரா தைக்கணும். ஆரம்பத்திலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க.




கூடுதல் பாக்கெட்டை கத்தரிக்கோலால கட் பண்ணிருங்க. இப்ப நாம ஓபன் என்ட்ஸ தைக்கணும். எட்ஜ கால் அங்குலம் மடிச்சு பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. இதே பிராசஸ இன்னொரு பக்கத்துக்கும் ரிபீட் பண்ணுங்க. தையல் பாக்க இப்படி இருக்கும். அதுக்கு அப்புறம் நாம பாட்டம் ஓபனிங் போர்ஷனை தைக்கலாம். இதை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தையுங்க.




இப்ப பின் பாக்கெட் தயார். வலது கால் பேக் பாக்கெட் கிரியேட் பண்ணவும் இதே ஸ்டெப்ஸ ரிபீட் பண்ணுங்க.




**ஸ்டெப் 9 பேக் பீசஸ ஒன்றாக இணைத்தல்**

ரெண்டு பீசும் ரெடியான உடனே ரெண்டையும் ஒன்னா இணைக்கணும். ஒன்றின் மேல ஒன்றை ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்தா மாதிரி வைக்கணும். க்ரோச் தைக்கிறது மூலமா இதை நாம இணைக்கலாம். ஆனா தைக்கிறதுக்கு முன்னால வெய்ஸ்ட்லையனிலிருந்து டாப்ல பெல்ட் பகுதிக்கு ஒரு இடைவெளி விடுவோம். டேப்பால 3½ இன்ஞ்ச் அளந்து மார்க் பண்ணிக்கொங்க . நாம இந்த மார்க் வரைதான் தைப்போம்.







துணிய பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. துணி வளைஞ்சு இருக்கறதால கை ஆடாம மெதுவா தைக்கணும். மார்க் வரை வந்த பிறகு, நிறுத்திட்டு, தையல் பிரியாம இருக்க ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. நீங்க தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கணும், நாம மார்க் பண்ணின வரைதான் தைச்சிருக்கோம்னு நீங்க பாக்கலாம்.







### ஸ்டெப் 10 முன், பின் பீசஸ ஒன்றாக இணைத்தல்

டிரவுசர்ஸ்சோட பின்பக்கத்தை ஓபன் பண்ணுங்க. அதுக்கு மேல டிரவுசர்ஸ்ன் முன் பீசை ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்தா மாதிரி வைக்கணும். இந்த ரெண்டு பீசையும் சைட் சீம்ஸ் அப்புறம் இன்னர் சீம்ஸ தைக்கறது மூலமா ஜாயின் பண்ணுவோம். சீம்ஸ்ல ஒன்றை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி, ஒட்டுமொத்த சைட் சீம்ஸ்க்கும் நேர் தையல் போடத் தொடங்கணும். பான்ட்டோட கீழ்ப்பகுதி வரை தைக்கணும். முடியற இடத்துக்கு வந்ததும் ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு ஃபினிஷ் பண்ணுங்க. இதே மாதிரி சீம்-ன் அடுத்த பக்கத்தையும் தைக்கணும். இன்னர் சீம்-அ பாக்கலாம். இந்த ஸ்டிச் கொஞ்சம் தனித்துவமானது, ஒரு காலிலிருந்து க்ரோச் வழியா போய் அடுத்த கால் வரை நாம ஒரு தொடர் தையல் போடுவோம். இன்னர் சீம்-அ பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. க்ரோச் ஏரியாக்கு வந்த பிறகு மெதுவா தைக்கணும் அது சரியா தைக்கப்படுதான்னு உறுதி செய்துக்கணும். இன்னொரு காலோட கீழ்ப்பகுதி வரை தைச்சு ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு ஃபினிஷ் பண்ணுங்க. இதுதான் தைக்கப்பட்ட சைட் சீம். இது இன்னர் சீம், இது குரோச்.





### ஸ்டெப் 11 வெய்ஸ்ட் பான்ட் தயாரித்தல்




அடுத்து டிரவுசரோட ரொம்ப சுவாரஸ்யமான பகுதி, வெய்ஸ்ட் பான்ட் அது இங்க அட்டாச் பண்ணப்பட்டிருக்கும். ஜிப்பரை ஓபன் பண்ணுங்க. டேப் எடுத்துகிட்டு இதுல காட்டி இருக்க மாதிரி ஃப்ளை ஆரம்பத்திலிருந்து பின்பகுதியோட நடுப்பகுதி வரை அளங்க. இந்த தொலைவு நம்ப வெய்ஸ்ட்லைனுக்கு பாதி இருக்கும். எங்களுக்கு இது 19½ இன்ஞ்ச் வருது. டிரவுசரை தனியா வைச்சிட்டு , டிரவுசரோட மீதி உள்ள துணிய கொண்டு வாங்க. இப்ப கேன்வாஸ் ஸ்ட்ரிப்ப எடுத்து அதை ஓபன் பண்ணுங்க. டேப்ப எடுத்துகிட்டு 19½ அளங்க இது வெய்ஸ்ட் அளவின் பாதியும் 2 இன்ஞ்ச் கூடுதலாவும் இருக்கும். 21½ இன்ஞ்ச்ல மார்க் பண்ணுங்க. இந்த மார்க்ல கேன்வாஸ கட் பண்ணுங்க. நமக்கு கேன்வாஸ்ல இன்னொரு ஸ்ட்ரிப் தேவைப்படும், ஆனா இது சரியா 19½ இன்ஞ்ச் அளவுதான் இருக்கும். அளந்து மார்க் பண்ணுங்க. இந்த மார்க்ல ஸ்ட்ரிப்ப கட் பண்ணுங்க.






துணியின் ராங் சைட்ல ஸ்ட்ரிப்ப வைச்சு அதுக்கு மேல அயர்ன் பண்றது மூலம் துணியோட அதை ஃப்யூஸ் பண்ணுங்க. எட்ஜ் டு எட்ஜ் சரியா அயர்ன் பண்ணி இருக்கிறதை உறுதி செய்துக்கொங்க அடுத்த ஸ்ட்ரிப்புக்கு இதே பிராசஸ ரிபீட் பண்ணுவோம்.

s




ஸ்ட்ரிப்ஸ் ஃப்யூஸ் பண்ணின பிறகு, அவற்றை சுற்றி ஒரு சீம் அலவன்ஸ் கிரியேட் பண்ணனும். முதல்ல சின்ன ஸ்ட்ரிப்ப பாக்கலாம். நமக்கு அரை அங்குலத்துக்கு அலவன்ஸ் தேவை. கேன்வாஸ் ஸ்ட்ரிப் டாப்பிலிருந்து குறிப்பிட்ட இடைவெளிகள்ல அரை இன்ஞ்ச் மார்க் பண்ணுங்க.


















இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்ட்ரிப்போட சைட்ல ½ இன்ஞ்ச் பாயிட்ஸ பாட்டம்லயும் மார்க் பண்ணுங்க. ஸ்கேல் எடுத்துட்டு ஸ்ட்ரிப்ப சுற்றி ஒரு பாக்ஸ் கிரியேட் பண்ணுங்க. இது முடிஞ்சதும் நீண்ட ஸ்ட்ரிப்புக்கு போகலாம். சின்ன ஸ்ட்ரிப் மாதிரியே நீண்ட ஸ்ட்ரிப்போட டாப்லயும் பாட்டம்லயும் ½ இன்ஞ்ச் மார்க் பண்ணுங்க. ஆனா, சைட்ல நாம 2½ இன்ஞ்ச்ஸ் மார்க் பண்ணுவோம். ஸ்ட்ரிப்ப சுற்றி ஒரு பாக்ஸ் கிரியேட் பண்ண மறுபடியும் ஸ்கேல் எடுத்துட்டு மார்க் பண்ணின எல்லா பாயிட்ஸயும் ஜாயின் பண்ணுங்க. கத்தரிக்கோல எடுத்து மார்க் பண்ணின லைன்ஸ்ல கட் பண்ணுங்க. விளிம்புகள்ல கவனமா இருந்து ரொம்ப சரியா கட் பண்றேமான்னு பாருங்க இப்ப நம்பகிட்ட சீம் அலவன்சோட ரெண்டு ஸ்ட்ரிப்ஸ் இருக்கு ஃப்யூசிங்கையும் அட்டாச் பண்ணியாச்சு. இந்த ஸ்ட்ரிப்ஸ தனியா எடுத்து வையுங்க.

மீதி உள்ள துணிய கொண்டு வாங்க. பெல்ட் ஹூப்ஸ்க்கு நமக்கு இன்னொரு ஸ்ட்ரிப் தேவை. பிளைன் சைடிலிருந்து 1½ இன்ஞ்ச் மார்க் பண்ணுங்க. நேர் வரைய சுலபமா இருக்க பல்வேறு பாயின்ட்ஸ்ல மார்க் பண்ணிட்டே வாங்க. ஸ்கேலால ஒரு லைன் வரைங்க. மார்க் பண்ணின லைனை கட் பண்ணுங்க. இப்ப நம்ப ஸ்ட்ரிப் ரெடி. இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்ட்ரிப்ப பாதியா மடிச்சு தைக்கலாம்.

மடிச்ச ஸ்ட்ரிப்ப பிரஸ்ஸர் ஃபூட் அடில வைச்சு இதுல காட்டின மாதிரி தையுங்க. தைச்சிட்டே மடிப்பை அட்ஜஸ்ட் பண்ணுங்க. ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு ஃபினிஷ் பண்ணுங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணுங்க.


இப்ப நமக்கு ஓபன் சீம் அலவன்ஸ் தேவை, அதை ஃபிளாட்டன் பண்ணி அதுக்கு மேல அயர்ன் பண்ணுங்க. தொடர்ந்து ஃபிளாட்டன் பண்ணிகிட்டே அயர்ன் பண்ணுங்க. அயர்ன் பண்றப்ப எச்சரிக்கையோட இருங்க. ஒரு பக்கத்தில சீம் அலவன்ஸ் முடிஞ்சதும் அதையே இன்னொரு பக்கத்துக்கும் ரிபீட் பண்ணுங்க.

அயர்ன் பண்ணின பிறகு ஸ்ட்ரிப்ப வெளிப்பக்கமா திருப்புங்க. நாம இதுக்கு லூப் டர்னர் யூஸ் பண்ணலாம். லூப் டர்னர உள்ள நுழைச்சு அதை இன்னொரு பக்கமா வெளிய எடுங்க. இப்ப லூப் டர்னரோட ஹூக்-அ துணில அட்டாச் பண்ணி லூப் டர்னர மெதுவா வெளிய இழுங்க. இப்ப துணி அதோட வரும், ஸ்ட்ரிப்பும் வெளிப்பக்கமா திரும்பும். அயர்ன் போர்ட்டுக்கு வாங்க. சீம்லைனுக்கு மேல அயர்ன் பண்ணி அதை ஃபிளாட்டன் பண்ணுங்க. அயர்ன் பண்ணின ஹூப் ஸ்ட்ரிப் பாக்க இப்படி இருக்கணும். மறுபடியும் தைக்க ஆரம்பிக்கலாம்.

ஸ்ட்ரிப்போட எட்ஜ்ஸ்ல எட்ஜ் ஸ்டிச் போடணும். ஒரு எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்-ல அலைன் பண்ணி தையுங்க. ஸ்ட்ரிப்போட ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை வரை போங்க. இப்ப ஸ்ட்ரிப்போட இன்னொரு முனைலயும் அதே எட்ஜ் ஸ்டிச்-அ போடுங்க. அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. தைச்ச ஸ்ட்ரிப் பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப வெய்ஸ்ட்லைனுக்கு லூப்ஸ் கட் பண்ண தொடங்கலாம். ஸ்ட்ரிப்ப ரெண்டா மடிச்சு மடிப்புல கட் பண்ணுங்க. ஒரு பாதிய எடுத்து மறுபடியும் மடிச்சு மடிப்புல கட் பண்ணுங்க. மறுபடியும் சின்ன ஸ்ட்ரிப்ன் ஒரு பாதிய எடுத்து அதை பாதியா கட் பண்ணுங்க. மொத்தமா நமக்கு 8 லூப்ஸ் கிடைக்கும்.
















இப்ப நம்ப கேன்வாஸ் ஸ்ட்ரிப்புக்கு போகலாம். இதுல நாம லூப்ஸ் பின் பண்ணுவோம். சின்ன ஸ்ட்ரிப்ப எடுத்துகிட்டு அதை திருப்புங்க. விளிம்பிலிருந்து 3.5 அங்குலம் அளந்து மார்க் பண்ணிக்கொங்க. ஸ்ட்ரிப்புல 4 மார்க்ஸ் கிரியேட் பண்ணுங்க, ஒவ்வொரு மார்க்ஸ்க்கும் 3.5 அங்குலம் இடைவெளி இருக்கணும். மீதி ஸ்ட்ரிப்ப அப்டியே விட்ருங்க. லூப்-அ மார்க் செய்த இடத்தில வையுங்க, லூப்போட பாட்டம், ஸ்ட்ரிப்போட பாட்டம் லைனோட மேட்ச் ஆகணும். லூப்-அ அதன் இடத்தில வைச்சு பின் பண்ணுங்க. மற்ற எல்லா மார்க்ஸ்லயும் இதையே செய்யுங்க. இப்ப நீளமான கேன்வாஸ் ஸ்ட்ரிப்புக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. ஆரம்பத்திலேந்து ஒவ்வொரு 3.5 அங்குல இடைவெளில லூப்-அ பின் பண்ணுங்க.

ஆன்டி-ஸ்லிப் வெய்ஸ்ட் பான்ட்-அ எடுத்து அதை கேன்வாஸ் ஸ்ட்ரிப் மேல ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்தா மாதிரி வைங்க. பான்ட்-ன் முனைகளை பின் பண்ணுங்க அதோட ஒவ்வொரு லூப்பயும் பின் பண்ணுங்க. இந்த பான்ட்-ன் அளவு பாதி வெய்ஸ்ட் பான்ட் அளவுல ½ இன்ஞ்ச் அதிகமா இருக்கணும். இந்த பாயின்ட்-அ 20”ல் மார்க் பண்ணுங்க. இந்த மார்க்ல ஆன்டி-ஸ்லிப் பான்ட்-அ கட் பண்ணுங்க. ரெண்டாவது கேன்வாஸ் ஸ்ட்ரிப்புக்கு போகலாம், எல்லா லூப் பொசிஷன்லயும் ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்தா மாதிரி பின் பண்ணுங்க. இந்த ஸ்ட்ரிப்ல உள்ள பான்ட், ஸ்ட்ரிப் நீளம் ரெண்டும் சமமா இருக்கும். பான்ட்-அ கட் பண்ணுங்க. ஸ்ட்ரிப்ஸ்ல பான்ட்-அ தைக்கலாம்.

நீள ஸ்ட்ரிப்ப எடுத்துக்கிட்டு அதை பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. ஆரம்பத்தில ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. தைச்சிட்டே பின்ஸ நீக்கிருங்க. லூப்ஸ் அசையாம, இடம் மாறாம இருக்கறதை உறுதி செய்துக்கொங்க. வெய்ஸ்ட் பான்ட் முடியற இடத்துக்கு வந்த பிறகு நிறுத்திட்டு ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. தைச்சது பாக்க இப்படி இருக்கணும். பான்ட்-அ ஃபிளிப் பண்ணி விரிச்சு இதுல காட்டியிருக்க மாதிரி எட்ஜ் ஸ்டிச் போடுங்க. பான்ட் முடிவுவரை தைச்சு நூலை கட் பண்ணிருங்க. இப்ப மெயின் துணிக்கு லூப்ஸ் தைக்கலாம். ஸ்ட்ரிப்ப பிரஸ்ஸர் ஃபூட் அடியில முதல் லூப்புக்கு முன்னால சுமார் 2-3 இன்ஞ்ச்க்கு அலைன் பண்ணுங்க. நெருக்கமா வரும்போது, லூப்-அ பின் நீக்கிட்டு, பெல்ட் சுலபமா அதுக்குள்ள நுழைய அதை கொஞ்சம் தளர்த்தணும். லூப் நேரா இருக்கான்னு பாத்துட்டு அதுக்கு மேல தையுங்க. ஸ்ட்ரிப்போட எல்லா லூப்ஸ்க்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. முனைக்கு வந்த பிறகு நூலை கட் பண்ணுங்க. லூப்ஸ் பாக்க இப்படித்தான் இருக்கும். அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. தையலையோ அல்லது டிரவுசர் துணியையோ கட் பண்ணிராதீங்க.






ஸ்ட்ரிப்ப தலைகீழா திருப்புங்க. தொடக்கத்துல அதிகப்படியா ஒரு துணி பீஸ் இருக்கறதை நீங்க பாக்கலாம். ரைட் சைட் ரைட் சைட்-அ பாக்கற மாதிரி அந்த பீசை மடிக்கணும்.




இந்த பீசோட எட்ஜஸ தைக்கணும். ஸ்ட்ரிப்போட ஓபன் என்ட் உள்பக்கமா இதுல காட்டியிருக்க மாதிரி 1/2க்கு மடிக்கணும். விளிம்புல தைக்க ஆரம்பிங்க. ஆரம்பத்திலேயும் முடியற இடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க. தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கணும்.






இந்த ஸ்ட்ரிப்புல இன்னும் ஒரு தையல் போடணும். ஃப்யூசிங்கோட அகலத்துக்கு ஏற்றாற்போல பெல்ட் அளவு இருக்கணும். இந்த ஸ்ட்ரிப்ப திருப்பி ஃப்யூசிங் விளிம்புல தைக்கணும். பிரஸ்ஸர் ஃபூட்டோட எட்ஜ அலைன் பண்ணி தைக்க ஆரம்பிக்கணும். நூலை கட் பண்ணிட்டு இன்னொரு பக்கத்துலயும் இதை ரிபீட் பண்ணுங்க. இந்த போர்ஷன் பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப அதை கொஞ்சம் வெளிப்பக்கமா திருப்பணும். இது டிரவுசரோட டெலிகேட் போர்ஷன் அதனால திருப்பறப்ப பொறுமையா இருக்கணும். இது முடிஞ்சதும் அது பாக்க இப்படி இருக்கும்.




இப்ப ரெண்டாவது ஸ்ட்ரிப்புக்கு போகலாம், இந்த எல்லா பிராசஸயும் ரிபீட் பண்ணுங்க. பான்ட் தைக்கறது, டாப் தையல் போடறது, அப்புறம் கடைசில லூப்ஸ் தைக்கறது அதிகப்படியா உள்ளதை கட் பண்றதுன்னு எல்லாம் செய்யணும். இது முடிஞ்சதும் இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்ட்ரிப்ப பாதியா மடிச்சு, கேன்வாஸின் எட்ஜ்ல அகல வாக்குல தைக்கணும். தைச்சு முடிச்சதும் அதை உள்பக்கமா திருப்புங்க. ஸ்ட்ரிப் பாக்க இப்படித்தான் இருக்கும்.




**ஸ்டெப் 12 டிரவுசருடன் வெய்ஸ்ட் பான்ட் அட்டாச் செய்து பாட்டம் ஹெம் செய்தல்**








மாதிரி டிரவுசரோட இடது கால்ல ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கற மாதிரி வையுங்க. கூடுதல் போர்ஷன பேண்டின் ஃப்ளைக்கு அப்பால விட்டுவிடனும். ஸ்ட்ரிப்ப வெய்ஸ்ட்லைன்ல பின் பண்ணுங்க. ஸ்ட்ரிப்பயும் வெய்ஸ்ட்லைனயும் ரொம்ப சரியான மேட்ச் பண்ணி இருக்கீங்களான்னு உறுதி செய்துக்கொங்க. இன்னொரு ஸ்ட்ரிப்ப எடுத்து எதிர் காலோட ஃப்ளையோட அலைன் பண்ணி இதுல காட்டி இருக்க மாதிரி ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கற மாதிரி வையுங்க. வெய்ஸ்ட் பான்ட்-அ வெய்ஸ்ட்லைனுக்கு குறுக்குல பின் பண்ணுங்க. பின் பண்ணின லைன்ல தைக்கணும். அதோட டிரவுசரின் பாட்டமையும் ஹெம் பண்ணனும். தைக்கலாம் வாங்க டிரவுசரை மிஷினுக்கு கொண்டு போங்க. முதல்ல பான்ட்-அ எக்ஸ்ட்ரா போர்ஷனோட தைக்கணும். இதுல காட்டியிருக்க மாதிரி ஆன்டி-ஸ்லிப் பான்ட் அடியில, கேன்வாஸ் ஃபேசிங் எட்ஜ்ல தைப்போம். மெதுவா தைச்சிட்டே மொத்த பான்ட்-யும் தைச்சு முடிங்க. தைச்சிட்டே பின்ஸ நீக்கிருங்க. எட்ஜ் கொஞ்சம் ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு முடிங்க. வெய்ஸ்ட் வலது பக்கத்திலிருந்து பாக்க இப்படித்தான் இருக்கும். இப்போ இன்னொரு பான்ட்க்கு போகலாம். இதுக்கு கேன்வாஸ் ஸ்ட்ரிப் எட்ஜ்ல ஆன்டி-ஸ்லிப் பான்ட்-க்கு அடியில தைக்கணும். தைச்சிட்டே பின்ஸ நீக்கிரணும். முடியற இடத்துக்கு வந்த உடனே ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க. நூலை கட் பண்ணிருங்க. பான்ட் சரியா தைக்கப்படறதை உறுதி செய்துக்கொங்க.




பேன்ட்-டோட பின் பகுதிக்கு போகலாம். டிரவுசர் துணி பின்னால ஒரு ஓபனிங் விட்ருக்கறதை நீங்க பாக்கலாம். ரைட் சைட் ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி பக்கங்களை அலைன் பண்ணி துணிய பிரஸ்ஸர் ஃபூட்-ல வையுங்க. விட்ட இடத்திலிருந்து வெய்ஸ்ட் பான்ட் முழுக்க ஆனா கேன்வாஸ் போர்ஷன்ல தைக்கணும். அதுக்கு அப்புறம் இதுல காட்டியிருக்க மாதிரி ஆன்டி-ஸ்லிப் பான்ட்-ல தைக்கணும். ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு ஃபினிஷ் பண்ணுங்க. ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு ஃபினிஷ் பண்ணுங்க.




இது காட்டினபடி அதிகப்படியா உள்ள பான்ட்-அ அப்புறம் ஸ்ட்ரிப் பீஸ்களையும் கட் பண்ணிருங்க.




இப்ப விரலால சீம் அலவன்ஸ ஃபிளாட்டன் பண்ணுங்க. வெய்ஸ்ட் பான்ட்-அ அதுக்கு மேல மடிங்க. வெய்ஸ்ட் முழுசும் வெளியிலிருந்து ஒரு ஸ்ட்ரைட் ஸ்டிச் போடணும். இடது பக்கத்தோட ஃப்ளை போர்ஷனை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. பான்ட்-அ தொடர்ந்து உள்பக்கமா மடிச்சிட்டே போங்க. வெய்ஸ்ட்லைன் நேர்த்தியா இருக்க இந்த மடிப்பு ரொம்ப முக்கியம். வெய்ஸ்ட் பான்ட் முழுவதும் தையுங்க, அவ்ளோதான் முடிஞ்சிருச்சு.




முன், பின் பக்கங்களிலிருந்து பாக்க வெய்ஸ்ட்லைன் இப்படித்தான் இருக்கும். கொஞ்சம் ஃபினிஷிங் டச்சஸ் செய்யலாம். டிரவுசரோட ஃப்ளாப்-ல ஹூக் அப்றம் ஐ-ய தைக்கணும். அதுக்கு முன்னால விளிம்புல கையால ஹெம் பண்ணனும். ஹெம் பண்ணி முடிச்சதும் நூலை கட் பண்ணிருங்க.




ஹூக்-அ பெல்ட் எக்ஸ்டன்ஷனோட ரிவர்ஸ் சைட்ல இதுல காட்டின மாதிரி வைச்சு தையால தையுங்க. டிரவுசரோட ரைட் சைட்ல தைக்காம இருக்கிறதை பாத்துக்கணும். முடிஞ்சதும் நூலை கட் பண்ணிருங்க.




இதே போல ரெண்டாவது ஹூக்-அ ஆன்டி-ஸ்லிப் லைனிங் ஜாயின்ட் மற்றும் ஃப்ளாப் மேல தைக்கணும். சாக்கை எடுத்துட்டு எதிர்பக்கத்தில உள்ள ஹூக் பொசிஷனை மார்க் பண்ணுங்க. இதுதான் ஐ பொசிஷனா இருக்கும். இன்னொரு ஐ-க்கு இதையே செய்யுங்க. மார்க் பண்ணின லைன்ல ஐ-அ கையால தையுங்க. ஹூக்கும் ஐ செட்டும் எவ்ளோ நீட்டா இருக்குன்னு பாருங்க.




டிரவுசரோட இறுதி பகுதி. பாட்டாம் ஹெம் பண்ணனும். டிரவுசர திருப்பிப் போடுங்க, டிரவுசரோட ராங் சைட்ல கொஞ்சம் வேலை இருக்கு. கீழே ½ அங்குலம் மடிச்சு அப்புறம் மறுபடியும் ஒரு அங்குலம் மடிங்க. அதை கையால ஹெம் பண்ணுங்க. இன்னொரு பாட்டம்க்கும் அதையே ரிபீட் பண்ணுங்க. அவ்ளோதான். டிரவுசர மறுபடியும் சரியா திருப்பிருங்க.




இப்ப நம்ப டிரவுசர்ஸ் தயரார். பார்க்க அருமையா நல்லா இருக்குல்ல? இதை உங்க அலமாரியில வைச்சு ஸ்டைல உசத்திக்கொங்க

